


**02. 06. 2026**

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மத்திய அரசின் கல்வி உதவி திட்டங்கள் மாணாக்கருக்கு புதிய வாய்ப்புகளை உருவாக்கும் என்று குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

2. உச்சநீதிமன்றத்திற்கு புதிதாக நியமிக்கப்பட்ட ஐந்து நீதிபதிகள் இன்று பதவி ஏற்றனர்.

3. தமிழகத்தில் வெப்பநிலை குறைந்துள்ளதால் பள்ளிகள் நாளை மறுநாள் திறக்கப்படும் என்று மாநில பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் திரு. கே .ஏ. செங்கோட்டையன் அறிவித்துள்ளார்.

4. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து தனியார் பள்ளிகளும் கல்வி கட்டணத்தை வெளிப்படையாக தெரிவிக்க வேண்டும் என்று அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

5. இந்திய இங்கிலாந்து மகளிர் அணிகளுக்கிடையிலான 3ஆவது இறுதி 20-20 கிரிக்கெட் போட்டி டான்டெனில் இன்று நடைபெறுகிறது.

<u>இனி விரிவான செய்திகள்</u>

**************

குடியரசு தலைவர்

அரசின் கல்வி உதவி தொகை திட்டங்கள் பழங்குடியினருக்கு உயர்கல்வி மற்றும் புதிய வாய்ப்புகளுக்கான வழியை ஏற்படுத்துவதாக குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

குடியரசு தலைவர் மாளிகையில் இன்று கல்வி உதவி தொகை திட்டத்தின் பழங்குடியின பயனாளிகளிடையே உரையாற்றிய அவர், சமூகத்தின் அனைத்து பிரிவினரும் சமூகம், பொருளாதாரம், கல்வி ரீதியாக முன்னேறும் போது தான் உண்மையான வளர்ச்சியை எட்ட முடியும் என்றார்.

கல்வி ஒருவரை தன்னம்பிக்கை உடையவராகவும், விழிப்புணர்வு மற்றும் திறன் வாய்ந்தவர்களாக மாற்றுவதால் அதிகாரம் அளிப்பதற்கான ஒரு சக்தி வாய்ந்த வழிமுறை என்று குறிப்பிட்டார்.

நம் நாட்டில் திறன் படைத்தவர்கள் அதிக எண்ணிக்கையில் இருப்பதாக சுட்டிக்காட்டிய குடியரசு தலைவர் அவர்களை கண்டறிந்து வளர செய்ய சரியான தளத்தை வழங்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

**************

பிரதமர்

நாட்டின் இளையோர் உறுதிபாட்டுடனும், சுய கட்டுப்பாட்டுடனும் தேசத்தை கட்டமைக்கும் பணியில் அயராது ஈடுபட்டு வருவதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

பிரதமர் இன்று வெளியிட்ட சமூக வலைதள பதிவில் இத்தகைய செயல்பாடுகள் கடினமான பாதையை கூட எளிதாக்கும் என்று கூறியுள்ளார்.

**************

ஜெய்சங்கர்

இந்திய தென்னாப்பிரிக்க நாடுகளுக்கிடையே வர்த்தகம் முதலீடு குறு சிறு நடுத்தர தொழில் நிறுவனங்கள், டிஜிட்டல், உள்கட்டமைப்பு துறைகளில் வாய்ப்புகள் குறித்து விவாதிக்கப்பட்டதாக மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் தென்னாப்பிரிக்க துணை அதிபர் Paul Mashatile உடனான சந்திப்பிற்கு பின் அமைச்சர் வெளியிட்ட சமூகவலைதள பதிவில் சர்வதேச விவகாரங்களில் இருநாடுகளும் இணைந்து பணியாற்ற இதில் ஒப்புக்கொண்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இருநாடுகளின் நீண்டகால நட்புறவை மேலும் வலுப்படுத்துவதில் தென்னாப்பிரிக்க துணை அதிபரின் ஆர்வத்தை டாக்டர் ஜெய்சங்கர் பாராட்டினார்.

அரசு முறை பயணமாக இந்தியா வந்துள்ள தென்னாப்பிரிக்க துணை அதிபர் குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு, குடியரசு துணை தலைவர் திரு.சி.பி.ராதாகிருஷ்ணன் உள்ளிட்டோரையும் சந்தித்து பேச உள்ளார்.

**************

உச்சநீதிமன்றம்

உச்சநீதிமன்றத்திற்கு புதிதாக நியமிக்கப்பட்ட ஐந்து நீதிபதிகள் இன்று பதவி ஏற்றனர்.

புதுதில்லியில் நடைபெற்ற பதவி ஏற்பு நிகழ்ச்சியில் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி சூரியகண்ட் இவர்களுக்கு பதவி பிரமாணம் செய்து வைத்தார்..

இதன்படி பஞ்சாப் மற்றும் ஹரியானா உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி Sheel நாகு,

மும்பை உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி ஶ்ரீ சந்திர சேகர்,

மத்திய பிரதேச உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி சஞ்சீவ் சச் தேவா

ஜம்மு காஷ்மீர் லடாக் உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி அரும்பள்ளி

தமிழகத்தை சேர்ந்த மூத்த வழக்கறிஞர் வெங்கிட சுப்பிரமணி மோகனா ஆகியோர் இன்று பொறுப்பெற்றுக்கொண்டனர்.

**************

CBSE

மத்திய இடைநிலை கல்வி வாரியம் CBSE மாணாக்கருக்கு வழங்கப்பட்ட விடைத்தாள்களின் Scan செய்யப்பட்ட நகல்களில் ஏதேனும் குறைபாடுகள் இருப்பின் அவற்றை சரிபார்ப்பதற்கும் விடைகளை மறுமதிப்பீடு செய்வதற்குமான இணையதளம் இன்றுமுதல் பயன்பாட்டிற்கு வந்துள்ளது.

வரும் 6-ஆம் தேதிவரை இது நடைமுறையில் இருக்கும்.

இதுதொடர்பாக CBSE வெளியிட்ட அறிக்கையில் தங்கள் மதிப்பிடப்பட்ட விடைத்தாள்களின் Scan செய்யப்பட்ட நகல்களை பெற்ற மாணாக்கர் மட்டுமே இந்த சேவையை பயன்படுத்திக்கொள்ள முடியும் என்று தெரிவித்துள்ளது.

பாதுகாப்பு காரணங்களுக்காக ஆதார் சரிபார்ப்பு முறை இதில் உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆதார் அட்டை இல்லாத மாணாக்கர் தங்கள் பெற்றோர், உறவினர் அல்லது பாதுகாவலரின் ஆதார் விவரங்களை பயன்படுத்திக்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மதிப்பெண் சரிபார்ப்பு மற்றும் மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பிப்பது குறித்த வழிமுறைகளை தெரிந்துகொள்ள மாணாக்கர் அதற்கான விளக்க

காணொலியை பார்வையிடுமாறு CBSE அறிவுறுத்தியுள்ளது.

**************

<u>மாநிலங்களவை</u>

தமிழகத்தில் காலியாக உள்ள ஒரு மாநிலங்களவை உறுப்பினர் பதவி இடத்திற்கு வரும் 8 ஆம் தேதிக்குள் வேட்பு மனு தாக்கல் செய்யலாம் என்று சட்டப்பேரவை செயலக தேர்தல் நடத்தும் அதிகாரி தெரிவித்துள்ளார்.

வரும் 9 ஆம் தேதி வேட்பு மனுக்கள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்றும், போட்டியிருப்பின் வரும் 18ஆம் தேதி வாக்குப்பதிவு நடைபெறும் என்றும் கூறினார்.

திரு.சி.வி.சண்முகம் மாநிலங்களவை உறுப்பினர் பதவியை கடந்த 7 ஆம் தேதி ராஜினாமா செய்ததை அடுத்து இத்தேர்தல் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

**************

<u>பியூஷ்கோயல்</u>

இந்தியா அமெரிக்கா இடையேயான இருதரப்பு வர்த்தக ஒப்பந்தத்தின் முதல் கட்டத்திற்கான பெரும்பாலான அம்சங்களை இருநாடுகளும் இறுதிசெய்துள்ளதாக மத்திய வர்த்தக தொழில்துறை அமைச்சர் திரு.பியூஷ்கோயல் தெரிவித்துள்ளார்.

முதல்கட்டத்தை இறுதி செய்வது குறித்த பேச்சுவார்த்தைகள் இன்றுமுதல் நாளை மறுநாள் வரை புதுதில்லியில் நடைபெற உள்ளதாக அமைச்சர் கூறினார்.

**************

<u>செங்கோட்டையன்</u>

தமிழ்நாட்டில் தென்மேற்கு பருவமழையை எதிர்கொள்ள அரசு அனைத்து முன்னேற்பாட்டு நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருவதாக மாநில பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் திரு.கே.ஏ. செங்கோட்டையன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் மழை நிலவரத்தை முன்கூட்டியே கண்டறியும் வகையில் மூன்று இடங்களில் ரேடார் மூலம் ஆய்வு செய்யும் பணிகள் நடைபெற்று வருவதாக கூறினார்.

இப்பணிகளை விரைந்து மேற்கொள்ள அதிகாரிகள் சமூக ஆர்வலர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

மாநிலத்தில் வெப்பநிலை சற்று குறைந்துள்ளதால் பள்ளிகள் முன் அறிவிக்கப்பட்டபடி நாளை மறுநாள் திறக்கப்படும் என்றார்.

வாய்ஸ்

**************

<u>வானிலை</u>

வளிமண்டல காற்றழுத்த தாழ்வுபாதை காரணமாக திருச்சி, கரூர், நாமக்கல், திண்டுக்கல் மதுரை தென்காசி திருநெல்வேலி கன்னியாகுமரி உள்ளிட்ட 22 மாவட்டங்களில் இன்று பலத்த காற்றுடன் கன மழை பெய்யக்கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வடக்கு உள் தமிழகத்தில் அதிக பட்ச வெப்பநிலை இயல்பை விட 2 டிகிரி செல்சியஸ் அதிகமாக இருக்கு கூடும் என்றும், பிற பகுதிகளில் வெப்ப நிலை இயல்பாகவே காணப்படும் என்றும் இம்மையம் கூறியுள்ளது.

**************

<u>கல்வி கட்டணம்</u>

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து தனியார் பள்ளிகளும் கல்வி கட்டணத்தை வெளிப்படையாக தெரிவிக்க வேண்டும் என்று மாநில அரசு இன்று உத்தரவு பிறப்பித்துள்ளது.

இதன்படி தனியார் மெட்ரிக் பள்ளிகள், CBSE பள்ளிகள், அரசு உதவிபெறும் பள்ளிகள் கல்வி

கட்டணத்தை தகவல் பலகையில் காட்சிபடுத்தவும், விளம்பர படுத்திய அறிக்கையை வரும் 10ஆம் தேதிக்குள் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கல்வி நிறுவனங்கள் வகுப்பு வாரியாக கல்வி கட்டணத்தை வரும் 5ஆம் தேதிக்குள் இணையதளத்தில் வெளியிட பள்ளி கல்வித்துறை இயக்குனர் ஆணை பிறப்பித்துள்ளார்.

**************

<u>தாயுமானவர் திட்டம்</u>

தமிழ்நாட்டில் தாயுமானவர் திட்டத்தின் கீழ் முதியவர்கள், மாற்றுத்திறனாளிகளின் இல்லங்களுக்கு ரேசன்பொருட்கள் வழங்கும் திட்டம் பல்வேறு மாவட்டங்களில் இன்று தொடங்கியது.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் இத்திட்டத்தின் கீழ் வரும் 4 மற்றும் 6 ஆம் தேதிகளில் அத்தியாவசிய பொருட்கள் விநியோகம் செய்யப்பட உள்ளதாக ஆட்சித்தலைவர் திருமதி சினேகா தெரிவித்துள்ளார்.

**************

<u>எடப்பாடி</u>

தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கை காக்கும் நடவடிக்கைகளை மாநில அரசு மேற்கொள்ள வேண்டும் என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி வலியுறுத்தியுள்ளார்.

இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் காவல்துறையை தன்வசம் வைத்திருக்கும் முதலமைச்சர் சட்டம் ஒழுங்கிற்கு பொறுப்பேற்க வேண்டும் என கூறினார்.

கடந்த மூன்று வாரங்களில் மாநிலத்தில் நடைபெற்ற குற்ற செயல்களை அவர் பட்டியலிட்டார்.

**************

கே.பி.ராமலிங்கம்

இதனிடையே தமிழ்நாட்டில் பெண்களுக்கு எதிரான குற்றங்களை தடுக்க மாநில அரசு தவறிவிட்டதாக பிஜேபியின் மாநில துணை தலைவர் திரு.கே.பி.ராமலிங்கம் குற்றம் சாட்டியுள்ளார்.

நாமக்கல்லில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், சட்டம் ஒழுங்கு தொடர்பாக அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர்கள், காவல்துறை உயர் அதிகாரிகளுடனான கூட்டத்தை அரசு நடத்த வேண்டும் என வலியுறுத்தினார்.

**************

பருத்தி

மத்திய அரசு பருத்தி மீதான இறக்குமதி வரியை ரத்து செய்ததை வரவேற்பதாக தென்னிந்திய பஞ்சாலைகள் சங்க தலைவர் துரை பழனிச்சாமி கோவையில் தெரிவித்தார்.

வாய்ஸ்

**************

திண்டுக்கல்

திண்டுக்கல் மாவட்டத்தில் தொழில் நிறுவனங்களுக்கான சிறப்பு தொழிற் கடன் முகாம் இம்மாத இறுதிவரை நடைபெற உள்ளதாக ஆட்சித்தலைவர் திரு.சரவணன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து எமது செய்தியாளர்

வாய்ஸ்

**************

கிருஷ்ணகிரி

கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர், தேன்கனிகோட்டை உள்ளிட்ட பகுதிகளில் முள்ளங்கி விலை வீழ்ச்சி காரணமாக விவசாயிகள் கவலை அடைந்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

**************

<u>கிரிக்கெட்</u>

இந்திய இங்கிலாந்து மகளிர் அணிகளுக்கிடையிலான 3ஆவது இறுதி 20-20 கிரிக்கெட் போட்டி டான்டெனில் இன்றிரவு 11 மணிக்கு தொடங்குகிறது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரில் இரு அணிகளும் தலா ஒரு ஆட்டத்தில் வெற்றிபெற்று சம நிலையில் உள்ளன.

**************

<u>பேட்மிண்டன்</u>

ஜகார்த்தாவில் நடைபெறும் இந்தோனேசிய ஓப்பன் பேட்மிண்டன் மகளிர் ஒற்றையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு இந்தியாவின் பி.வி.சிந்து முன்னேறியுள்ளார்.

ஆடவர் இரட்டையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு இந்தியாவின் ஹரிகரன், அர்ஜூன் இணை முன்னேறியுள்ளது.

ஆடவர் ஒற்றையர் முதல் சுற்றில் இந்தியாவின் லக்சயாசென் -இந்தோனேசியாவின் ஃபர்கானை இன்று எதிர்கொள்கிறார்.

**************